**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC.183/2021**
**வழக்கு சாட்சி. எ.சா. 2**

| **பெயர்:** | கோமதி | **ஜாதி:** | |
|---|---|---|---|
| **தந்தை பெயர்:** | க/பெ.சிதம்பரம் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 57 /2023 |

**17.10.2023**
**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுச பிரிவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**சாட்சி சத்தியபிரமாண வாக்குமூலம் செய்விக்கப்பட்டார்.**
**<u>முதல் விசாரணை</u>**

1)நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது என்றால் ஆமாம். அந்த சம்மனில் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் இருந்தது என்றால் ஆமாம். இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள லதா எனக்கு உறவினரா என்றால் எனது கணவருக்கு உறவினர். இவ்வழக்கின் எதிரி ரவிச்சந்திரன் எனது கணவரின் நண்பர் என்றால் முன்னால் நண்பராவார். எதிரிக்கும் எங்களுக்கும் 30 ஆண்டுகால பழக்க வழக்கம் என்றால் 20 வருடம் இருக்கும். எனக்கு மனைவி என்ற முறையில் இருவரது வரவு செலவு விவரங்களும் தெரியும் என்றால் இல்லை தெரியாது. எனது கணவர் எதிரி ரவிச்சந்திரன் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. 15.10.2014 அன்று எனது கணவருக்கும் ரவிச்சந்திரன் எதிரிக்கும் இவ்வழக்குத் தொடர்பாக சமரசம் ஏற்பட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை.

2) நான் எந்தக் கையொப்பமும் செய்யவில்லை. நான் தற்போது காரைக்குடி ரோட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்பு அறந்தாங்கி டவுன் மாதாகோவில் தெருவில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். எனவே என்னிடம் காட்டப்படும் கையொப்பமானது என்னுடையதா என்று என்னால் சரியாக கூறமுடியும் என்றால் கூறமுடியும். என்னிடம் காட்டப்படும் 15.10.2014 தேதியிட்ட ஒப்பந்தப்பத்திரமானது எனது கணவர் சிதம்பரத்திற்கும் எதிரி ரவிச்சந்திரனுக்கும் ஏற்பட்டதாக உள்ளதில் முதலாவது சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. (சாட்சி ஒப்பந்தத்தினைப் பார்த்து விட்டு இல்லை என மறுக்கிறார்) எனது கணவருக்காக நான் ஒப்பந்தம் ஏற்பட்டதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் எனது அலுவலகத்திலிருந்து எனது கையொப்பத்தினை வரவழைத்து ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பத்துடன் ஒப்பீடு செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. நான் இவ்ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்துவிட்டு வழக்கு காசோலையை எனது கணவர் வைத்திருப்பதை தெரிந்து கொண்டே வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**
வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இனங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.